வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி 27.05.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்தியாவிற்கு எதிரான பாகிஸ்தானின் நிழல் யுத்தம் என்பது, உண்மையில், நன்கு திட்டமிடப்பட்ட போர்த் தந்திரம்தான் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று குஜராத் மாநிலம் காந்திநகரில், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

மத்திய ஆயுஷ் துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் இன்று புதுச்சேரியில், யோகா விழாவைத் தொடக்கி வைத்து, புனரமைக்கப்பட்ட ஜிப்மர் அவசர சிகிச்சை கட்டிடத்தையும் திறந்து வைத்தார்.

யோகா, நடப்பு காலத்தின் முக்கிய தேவை என்றும், ஆரோக்கியமான எதிர்காலத்தின் ஒருங்கிணைந்த பகுதி என்றும், மத்திய அமைச்சர் திரு. ஜாதவ் கூறியுள்ளார்.

------------------------------

மோடி-குஜராத் 1 (7)

இந்தியாவிற்கு எதிரான பாகிஸ்தானின் நிழல் யுத்தம் என்பது, உண்மையில், நன்கு திட்டமிடப்பட்ட போர் தந்திரம்தான் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று குஜராத் மாநிலம் காந்தி நகரில், பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், இந்தியத்

தாக்குதலில் கொல்லப்பட்ட தீவிரவாதிகளுக்கு, பாகிஸ்தான் ராணுவத்தால் கவுரவம் அளிக்கப் பட்டதை, இதற்கு சான்றாக சுட்டிக் காட்டினார். பிரதமரின் உரை குறித்து மேலும் சில விவரங்கள்…

(வாய்ஸ்)

மோடி-குஜராத் 2 (13)

(வாய்ஸ்)

இந்தியா எவருடனும் பகைமை பாராட்டவில்லை என்றும், அமைதியாக வாழ்வதே இந்தியாவின் விருப்பம் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். உலகின் ஒட்டுமொத்த நன்மைக்கு பங்களிக்கும் விதத்தில் வளர்ச்சி அடைவதே இந்தியாவின் நோக்கம் என்றும், இதே நோக்கத்துடன்தான், பலகோடி இந்தியர்களின் முன்னேற்றத்திற்கு அரசு பாடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரத்தின் நூற்றாண்டை நாம் கொண்டாடும் போது, முன்னேறிய இந்தியாவாக மேம்பட்டு இருப்போம் என்பதில், எள்ளளவும் சந்தேகம் இல்லை என திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார். இந்த இலக்கை எட்டவே, நாட்டின் 2ஆம் நிலை, மற்றும், 3ஆம் நிலை நகரங்களின் மேம்பாட்டில், அரசு முக்கிய கவனம் செலுத்தி வருவதாகவும், உள்நாட்டு தயாரிப்புகளுக்கு ஆதரவு உள்ளிட்ட நிலைப்பாடுகள் மூலம், மக்கள் இதற்கு ஒத்துழைத்தல் அவசியம் என்றும், அவர் கூறினார்.

மோடி-குஜராத் 3 (7)

காந்திநகர் விழாவின் போது, குஜராத் மாநிலத்திற்கான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். நகர்ப்புற மேம்பாடு, உள்கட்டமைப்பு உள்ளிட்ட துறைகள் தொடர்பான இத்திட்டங்களின் மொத்த மதிப்பு, 5 ஆயிரத்து 536 கோடி ரூபாயாகும். முன்னதாக காந்தி நகரில், ஆபரேஷன் சிந்தூர் பெருமதிப் பேரணியை, பிரதமர் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

-----------------------------

*பரம் வீர் சக்ரா* 1 (7)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையீல் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், 1965ஆம் ஆண்டு இந்தோ- பாக் போரில் நாட்டிற்காக உயிர்தியாகம் செய்து, பரம்வீர் சக்ரா விருது பெற்ற, Company Quarter Master ஹவில்தார் அப்துல் ஹமீத் குறித்து ஒரு செய்தி தொகுப்பு....

(வாய்ஸ்)

*பரம் வீர் சக்ரா* 2 (19)

(வாய்ஸ்)

1965ஆம் ஆண்டு இந்தோ-பாக் போரின் போது, 4ஆவது Grenadier படைப் பிரிவினர், கேம் கரண்-விக்கிவிண்ட் சாலையில் உள்ள சைமா கிராமத்திற்கு அருகே, முக்கிய நிலை கொண்டிருந்தனர். இந்தியப் படைகளின் ஒட்டுமொத்த பாதுகாப்பு உபாயங்களுக்கு, இந்த இடம் மீதான கட்டுப்பாட்டை தொடர்ந்து பராமரிக்க தேவை அதிகம் இருந்தது. செப்டம்பர் 8ஆம் தேதியன்று இரவு, பாகிஸ்தானியப் படையினர், Grenadier படைப் பிரிவின் பல்வேறு நிலைகள் மீது, தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து, இந்தியப் படையினரும் திருப்பித் தாக்கினர். செப்டம்பர் 10ஆம் தேதி காலை, பாகிஸ்தானியப் படைகள், பட்டோன் டாங்கிகள் மூலம், பலத்த தாக்குதல் மற்றும் குண்டு வீச்சுகளில் ஈடுபட்டதால், நிலைமைகள் மிகவும் தீவிரமாயின. அன்று காலை 9 மணி வாக்கில், எதரிகளின் பீரங்கி வண்டிகள், இந்தியப் படைகளின் முன்னணி நிலைகளை தாண்டி உள்ளே வர முயன்ற போது, நெருக்கடியான அத்தருணத்தில், துப்பாக்கிப் படைப் பிரிவு ஒன்றின் தலைவராக இருந்த ஹவில்தார் அப்துல் ஹமீத், கொஞ்சமும் தாமதியாமல் உடனடி நடவடிக்கையில் ஈடுபட்டார். ஜீப்பில் துப்பாக்கியை ஏற்றிக் கொண்டு, சரமாரி குண்டு மழைக்கு இடையிலும், தமது படை அணியின் விளிம்பிற்கு

நகர்ந்தார். அங்கிருந்து, எதிரிப் படைகளின் முன்னணி டாங்கியை துல்லியமாக சுட்டுத் தாக்கி அழித்த பின்னர், அவர் உடனடியாக மற்றொரு

*பரம் வீர் சக்ரா 3 (13)*

நிலைக்கு இடம் மாறி, எதிரிப் படைகளின் மேலும் ஒரு பீரங்கியை தாக்கத் தொடங்கினார். இயந்திரத் துப்பாக்கி மூலமான, எதிரிகளின் சரமாரி குண்டுகளுக்கு கொஞ்சமும் அஞ்சாமல், அவர் தொடர்ந்து போராடிய போது, எதிரிப் படைகளின் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று, அவர் மீது விழுந்து வெடித்ததில், அவர் பலமாக காயமடைந்து, உயிர்த் தியாகம் செய்ய நேரிட்டது. உயிரை துச்சமென மதித்து, எதிரிகளுடன் கடைசி வரை அவர் போராடிய விதம், சக வீரர்களுக்கு பேரூக்கமாக அமைந்ததால், இந்தியப் படையினர் கூடுதல் வலுவுடன் போராடி, எதிரிப் படைகள் மேலும் முன்னேறுவதை திறம்பட்ட முறையில் தடுத்து நிறுத்தினர். இத்தகைய அசாதாரண துணிச்சல் மற்றும் உயிர்த் தியாகத்திற்காக, Company Quarter Master ஹவில்தார் அப்துல் ஹமீத்-திற்கு, மரணத்திற்கு பிந்தைய முறையில் பரம் வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது. அவருக்கு நாடு தலை வணங்குகிறது.

-----------------------------

*யோகா 1 (16)*

மத்திய ஆயுஷ் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மொரார்ஜி தேசாய் தேசிய யோகா கழகம் சார்பில், புதுச்சேரியில், கடற்கரை சாலை காந்தி திடலில் இன்று காலை நடைபெற்ற யோகா விழாவை, ஆயுஷ் துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தொடக்கி வைத்தார். வரும் ஜூன் 21ஆம் தேதி நடைபெற உள்ள சர்வதேச யோகா தின விழாவிற்கான 25 நாள் முன்னோட்டத்தின் தொடக்கத்தை குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த இவ்விழாவில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செல்வகணபதி

ஆகியோருடன், யோகா ஆர்வலர்கள், பிரமுகர்கள், மற்றும், மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

யோகா, நடப்பு காலத்தின் முக்கிய தேவை என்றும், ஆரோக்கியமான எதிர்காலத்தின் ஒருங்கிணைந்த பகுதி என்றும், மத்திய அமைச்சர் திரு. ஜாதவ், தொடக்க உரையில் கூறினார். அவர் மேலும் கூறுகையில்.....

(வாய்ஸ்-ஜாதவ்)

ே□ாகா 2 (5)

துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் விழாவில் பேசுகையில், சர்வதேச யோகா தினம், ஐ.நா சபையால் அறிவிக்கப் படுவதற்கு முன்பிருந்தே, பல ஆண்டுகளாக யோகா விழா நடத்திவரும் பெருமைக்குரியது, புதுச்சேரி என்றும், யோகா தின முன்னோட்ட விழா, புதுச்சேரியில் நடத்தப்படுவது மிக பொருத்தமானது என்றும் கூறினார். அவர் மேலும் கூறுகையில்...

(வாய்ஸ்-கைலாஷ்நாதன்)

யோகா 3 (4)

விழாவின் போது, அனைவருக்கும் ஏற்ற யோகாசனங்களின் பெருந்திரள் யோகா செயல் விளக்க நிகழ்ச்சியும் இடம்பெற்றது. 3 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மாணவ-மாணவியர், மற்றும் யோகா வல்லுனர்கள் இதில் கலந்து கொண்டனர்.

-----------------------------

ஜிப்மர்-ஜாதவ் (18)

புதுச்சேரி ஜிப்மரில், மத்திய பொதுப் பணித் துறை மூலம், 4.74 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப் பட்டுள்ள, அவசர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சை கட்டிடத்தை, மத்திய ஆயுஷ் துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ், இன்று, நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார். துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செல்வகணபதி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அரசுக் கொறடா திரு. ஏகேடி ஆறுமுகம், ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

தென்னிந்தியாவின் எய்ம்ஸ் மருத்துவமனைதான் ஜிப்மர் என, மத்திய இணையமைச்சர் திரு. ஜாதவ் தமது உரையில் குறிப்பிட்டு, ஜிப்மரில், ஒருங்கிணைந்த எம்பிபிஎஸ்-ஆயுர்வேதா படிப்பு ஒன்றை தொடக்க திட்டமிடப் பட்டுள்ளதாக தெரிவித்தார். ஜிப்மர் மருத்துவமனையின் மேம்பாட்டு பணிகளுக்கு, இயன்ற எல்லா வகையிலும் மத்திய நிதி உதவி வழங்கப்படும் என்றும் அவர் உறுதி அளித்தார்.

அமைச்சர் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், நாட்டில் கொரோனா தொற்று சற்றே அதிகரித்துள்ள போதிலும், நிலைமைகளை எதிர்கொள்ள, எல்லா மருத்துவக் கட்டமைப்புகளும் தயார் நிலையில் இருப்பதாக தெரிவித்தார்.

ஜிப்மர்-ஜாதவ் 2 (12)

தொடர்ந்து, ஜிப்மர் மருத்துவமனையின் கட்டமைப்பு வசதிகள் மற்றும் செய்பாடுகள் குறித்து, மத்திய அமைச்சர் திரு. ஜாதவ்

அதிகாரிகளுடன் மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். புதுச்சேரி சேதராப்பட்டில், அதி நவீன விபத்து சிகிச்சை மையம் மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மையம் அமைக்க திட்டமிடப் பட்டுள்ளதாக, ஜிப்மர் இயக்குநர் இக்கூட்டத்தில் தெரிவித்தார். ஏனாமில் உள்ள ஜிப்மர் கிளையில், டயாலிசிஸ் மற்றும் உள்நோயாளிகளுக்கான சிகிச்சைப் பிரிவுகள் அண்மையில் தொடக்கப் பட்டுள்ளதாகவும், காரைக்கால் ஜிப்மர் கிளைக்கான மருத்துவமனைக் கட்டிடம், 2027ஆம் ஆண்டு ஜூன் மாதம் தயாராகி விடும் என எதிர்ப்பார்க்கப் படுவதாகவும் அவர் கூறினார். ஜிப்மர் யோகா மையத்தில், வாழ்க்கை முறை திருத்தங்கள் பற்றிய ஆய்வுக் கூடத்தையும் இன்று மத்திய அமைச்சர் திறந்து வைத்தார்.

-----------------------------

*வானிலை (15)*

ஒடிசா கடலோர பகுதிகளை ஒட்டி, வடமேற்கு வங்கக்கடலில் இன்று, காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது. இது, வடக்கு திசையில் மெதுவாக நகர்ந்து, அடுத்த 48 மணி நேரத்தில், மேலும் வலுப்பெறக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்னிந்தியப் பகுதிகளின் மேல், வளிமண்டல மேலடுக்கு சுழற்சியும் நிலவுவதால், தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், திருப்பூர், திண்டுக்கல், மற்றும், குமரி மாவட்டங்களில் கனமழைக்கும, நெல்லை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும், தேனி, தென்காசி மாவட்டங்களில், மிக கனமழைக்கும், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி மாவட்டத்தில் ஒருசில இடங்களில், அதி கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக, வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. பலத்த காற்றுக்கு வாய்ப்புள்ள தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், மற்றும் வங்கக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

-----------------------------

ஐபிஎல் (4)

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு, லக்னோவில் நடைபெறும் போட்டியில், லக்னோ-பெங்களூரு அணிகள் மோத உள்ளன. புள்ளிப் பட்டியலில், தற்போது பஞ்சாப் அணி முதலிடத்திலும், பெங்களூரு அணி, 3ஆவது இடத்திலும் உள்ளன.

-----------------------------

அனைத்துக் கட்சிக் குழு (15)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை பற்றிய தூதரக புறவீச்சு முயற்சிகளின் ஒருபகுதியாக மத்திய அரசால் அமைக்கப்பட்ட 7 அனைத்துக் கட்சி பிரதிநிதிக் குழுக்களில், காங்கிரஸ் எம்பி. திரு. சசிதரூர் தலைமையிலான குழுவினர், இன்று தென் அமெரிக்க நாடான கயானாவில், அந்நாட்டு அதிபர் உட்பட முக்கிய தலைவர்களை சந்தித்து, தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாது என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறினர். ஜேடியு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சஞ்சய் குமார் ஜா தலைமையிலான குழுவினர், சிங்கப்பூரிலும், தேசியவாத காங்கிரஸ் எம்.பி. திருமதி சுப்ரியா சுலே தலைமையிலான குழுவினர் கத்தாரிலும், இதேபோன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டனர். தீவிரவாதத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்வதில், இந்தியாவிற்கு உள்ள உரிமைக்கு, கயானா ஆதரவு வெளிப்படுத்தி இருப்பதாக, திரு. சசிதரூர் தெரிவித்தார். பாகிஸ்தானை, நிதி செயல்பாட்டுப் பணிக் குழுவின் கருப்புப் பட்டியலில் சேர்க்க, தாங்கள் வலியுறுத்தி இருப்பதாக, திரு. சஞ்சய் குமார் ஜா கூறினார்.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இந்தியாவிற்கு எதிரான பாகிஸ்தானின் நிழல் யுத்தம் என்பது, உண்மையில், நன்கு திட்டமிடப்பட்ட போர்த் தந்திரம்தான் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று குஜராத் மாநிலம் காந்திநகரில், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

மத்திய ஆயுஷ் துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் இன்று புதுச்சேரியில், யோகா விழாவைத் தொடக்கி வைத்து, புனரமைக்கப்பட்ட ஜிப்மர் அவசர சிகிச்சை கட்டிடத்தையும் திறந்து வைத்தார்.

யோகா, நடப்பு காலத்தின் முக்கிய தேவை என்றும், ஆரோக்கியமான எதிர்காலத்தின் ஒருங்கிணைந்த பகுதி என்றும், மத்திய அமைச்சர் திரு. ஜாதவ் கூறியுள்ளார்.